பன்மயம் | இறையாண்மை | நிலைத்தன்மை | அமைதியான கூட்டுவாழ்வு

**கிசான் ஸ்வராஜ் சம்மேளன் 2026**

**விவசாயிகள் விடுதலை மாநாடு 2026**

விவசாயிகள் மற்றும் விவசாய சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டவர்களின் சங்கமம்

**தெற்குமண்டலம் பிப்ரவரி 27, 28 &மார்ச்1, 2026 (வெள்ளி–சனி–ஞாயிறு)**

**நடத்துபவர்கள்: நிலைத்த மற்றும் முழுமையான வேளாண்மைக்கான கூட்டமைப்பு (ASHA – Kisan Swaraj)**

**கர்நாடக மாநில திறந்த வெளிப் பல்கலைக்கழகம் (KSOU), மைசூரு-உடன்இணைந்து**

**இடம் : KSOU பட்டமளிப்பு மண்டபம், ஹுன்சூர் சாலை, மைசூரு**

**பதிவு செய்ய அழைப்பு!**

நிலைத்த மற்றும் முழுமையான வேளாண்மைக்கான கூட்டமைப்பு ணி (Alliance for Sustainable & Holistic Agriculture) எனப்படும் ASHA–கிசான் ஸ்வராஜ் வலையமைப்பு, தெற்கு மண்டலத்திற்கான 6வது **விவசாயிகள் விடுதலை மாநாடு** 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 27, 28 மற்றும் மார்ச் 1 (வெள்ளி, சனி & ஞாயிறு) நாட்களில், கர்நாடக மாநிலத்தின் மைசூருவில் உள்ள கர்நாடக மாநில திறந்த வெளி பல்கலைக்கழகம் (KSOU) உடன் இணைந்து நடத்துவதாக அறிவிக்கிறது.கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, கோவா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்த சம்மேளனில் பதிவு செய்து பங்கேற்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். கிழக்கு இந்தியாவைச் சேர்ந்தவர்கள், ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற உள்ள மற்றொரு கிசான் ஸ்வராஜ் சம்மேளன் பற்றிய அறிவிப்புக்காக காத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த சம்மேளனத்தின் **இடம்:KSOU (கர்நாடக மாநில திறந்தவெளி பல்கலைக்கழகம்), பட்டமளிப்பு மண்டபம், முக்தா கங்கோத்ரி, ஹுன்சூர் சாலை, மைசூரு – 570006.** ASHA–கிசான் ஸ்வராஜ் என்பது, நிலைத்த விவசாய வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும், விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் செயல்படும், இந்தியா முழுவதும் பரவியுள்ள தன்னார்வ குடிமக்கள் அமைப்புகளின் ஒரு தளமாகும். ASHA–கிசான் ஸ்வராஜ் குறித்த கூடுதல் தகவல்கள் http://www.kisanswaraj.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

நாம் எதிர்கொள்ளும் மிகச் சிக்கலான சவால்களை ஆழமாகப் புரிந்துகொள்வதற்காகவும், பல தளங்களில் தனித்தனியாகச் செயல்பட்டாலும் சிந்தனையிலும் செயலிலும் ஒருங்கிணைப்பு (synergy) உருவாகும் வகையில், நமது பொதுவான பிணைப்புகளை மீண்டும் உயிர்ப்பிக்கவும், ASHA அமைப்பு கிசான் ஸ்வராஜ் சம்மேளன்களை அவ்வப்பொழுது நடத்தி வருகிறது. இந்த சம்மேளன்கள் புதிய மனிதர்கள், புதிய சிந்தனைகள், பகுப்பாய்வுகள், ஆற்றல்கள் மற்றும் செயல்திட்டங்களை ஒன்றிணைக்கும் சங்கமங்களாகவும் அமைகின்றன. இந்தியாவில் விவசாய வாழ்வாதாரங்களை நிலைத்ததும் சமத்துவமானதுமான முறையில் மேம்படுத்தும் நோக்கில், அனைவரும் இணைந்து முன்னேறுவதற்கான மேடைகளாக இவை செயல்படுகின்றன.

இதற்கு முன், இத்தகைய சம்மேளன்கள் போபால் (2013), ஹைதராபாத் (2016), அகமதாபாத் (2018) மற்றும் மைசூரு (2022) ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. மேலும், OFAI (Organic Farming Association of India) அமைப்புடன் இணைந்து, OFAI-யின் இரண்டாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இயற்கை வேளாண்மை மாநாடுடன் இணைந்து, சண்டிகர்(2015)இல் இயற்கை விவசாயிகளின் மாநாட்டையும் ASHA ஏற்பாடு செய்தது.

கிசான் ஸ்வராஜ் சம்மேளன்கள் (KSS), குறிப்பாக இந்தியாவின் சூழலியல் வேளாண்மை (Agroecology) சமூகத்தைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைப்பதற்காகவும், பொதுவாக விவசாயிகளின் உரிமைகளுக்காக செயல்படுபவர்களை ஈர்ப்பதற்காகவும்

## கிசான் ஸ்வராஜ் சம்மேளன் பற்றி

வடிவமைக்கப்பட்டவை. இதில் **முன்னோடி விவசாயிகள், குடிமக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், சமூகத் தொழில் முனைவோர், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள்** உள்ளிட்டோர் பங்கேற்பார்கள். இந்த இயக்கம், பாதுகாப்பான, போதுமான, பன்மையம் மற்றும் சத்தான உணவுகளைப் பெறும் நுகர்வோரின் உரிமைகள் மற்றும் நுகர்வோர் தேர்வுகள் குறித்தும் அக்கறை கொள்கிறது. ஆகவே, அந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் பங்கேற்பாளர்களாக இருப்பார்கள். **எங்களின் சம்மேளன்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சமூகங்களின் தன்னாட்சி மற்றும் இறையாண்மை (இதன் நன்மைகள் நுகர்வோருக்கும் கிடைக்கும்) ஆகியவற்றை உருவாக்கும் குடிமக்கள் இயக்கத்தின் மதிப்புகள், பார்வைகள், அனுபவங்கள் மற்றும் அறிவை பிரதிபலிக்கின்றன. இதனுடன், பொருளாதார செழிப்பு, சமூக சமத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கும் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.** இந்த மாநாடுகள், சமூகத்தில் உள்ளவர்களை மீண்டும் இணைத்து, உருவாகிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து உரையாடல்களை நடத்தி, தரைமட்ட தீர்வுகளைப் பகிர்ந்து கற்றுக்கொண்டு, தேவையான கொள்கை மட்டத் தலையீடுகளை திட்டமிட உதவுகின்றன. ஒரே ஒரு தேசிய சம்மேளனத்திற்கு பதிலாக, **2026 ஆம் ஆண்டில் மூன்று மண்டல அளவிலான சம்மேளன்கள்** நடத்தப்படுகின்றன. இந்தக் குறிப்பில், **தென்னிந்திய விவசாயிகள் விடுதலை மாநாடு** பற்றிய தகவல்கள் வழங்கப்படுகின்றன.

KSS 2026 இந்தியாவில் உருவாகி வரும் நான்கு முக்கிய பிரச்சினைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தும்

- **விதை இறையாண்மை (Seed Sovereignty): 2025 ஆம் ஆண்டுக்கான வரைவு விதைகள் மசோதா, தாவர வகைகள் மற்றும் விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (PPV&FR Act, 2001)** குறித்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள், **மேலும் உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்கள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ITPGRFA – 'Plant Treaty')** மீதான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஆகியவை விவசாயிகளின் மற்றும் நாட்டின் விதை இறையாண்மையையும், அதனூடாக உணவு இறையாண்மையையும் அச்சுறுத்துகின்றன.
- **களைகொல்லி தாங்கும் பயிர்கள் (Herbicide Tolerant Crops) / களை மேலாண்மை**: இந்திய விதை சந்தையில் தற்போது **3 மரபணு மாற்றமில்லாத (non-GM) களைக்கொல்லிகளைத் தாங்கும் பயிர்கள்** அறிமுகமாகியுள்ளன. இதற்கு மேலாக, மரபீனி திருத்தம் செய்யப்பட்ட அரிசி வகைகளும் அறிமுகமாகியுள்ளன. இவை அனைத்தும் பலவீனப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை அமைப்புகள், நேர்மையற்ற அறிவியல் நடைமுறைகள் மற்றும் ஜனநாயகமற்ற கொள்கை உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. **இதனால் இயற்கை/ஆர்கானிக் வேளாண்மையின் தரம் மற்றும் நடைமுறைகள் அடிப்படையாகவே பாதிக்கப்படக்கூடும்;**
- **வேளாண்மையில் தொழிலாளர் நிலை**: வேளாண்மையில் மனித மற்றும் கால்நடை உழைப்பு / பயன்பாடு சிக்கலான மாற்றங்களை சந்தித்து வருகிறது. **விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், சுற்றுச்சூழல் மற்றும் கால்நடைகள் ஆகிய அனைத்துக்கும் பயன் தரும் நடைமுறை மற்றும் கொள்கைத் தீர்வுகள் அவசியமாகின்றன. MGNREGA ரத்து செய்யப்பட்டு VBGRAMG கொண்டு வரப்பட்ட பிறகு, இந்த விவாதம் புதிய பரிமாணங்களைப் பெறுகிறது;**
- **மனித–விலங்கு மோதல்கள்: வனவிலங்குகள் விவசாயிகளின் உயிர்கள், பயிர்கள் மற்றும் கால்நடைகள் மீது தாக்குதல் நடத்துவதால் இழப்புகளும் மோதல்களும் அதிகரித்து வருகின்றன. இதற்கான கொள்கை மட்டத்திலும் நடைமுறை மட்டத்திலும் தடுப்பு, தணிக்கை மற்றும் பிற தீர்வுகள் அவசியமாகின்றன.**

**வடிவமைப்பு:**

இந்த சம்மேளனம் **முழுக் கூட்டங்கள் (Plenaries)** மற்றும் **இணை அமர்வுகள் (Parallel Sessions) ஆகியவற்றை கொண்டிருக்கும். சிறப்பு விருந்தினர்கள் பேச்சாளர்களாகவும் விவாதர்களாகவும் பங்கேற்பார்கள். மேலும் கூடுதலாக, விதை பன்மையம் திருவிழா, இயற்கை உணவு கண்காட்சி, தொடர்புடைய கருப்பொருள்களில் நடைமுறை விளக்கங்கள், பொதுப் பேருரைகள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெறும். இணை அமர்வுகளே சம்மேளனத்தின் முக்கிய நடவடிக்கையாக இருக்கும். விவாதங்கள் மற்றும் பங்கேற்பு மிக்கவையாக அமையும். சுதந்திரமான, கருத்துப் பரிமாற்றத்திற்கான திறந்த அரங்குகளாக இருக்கும். இத்தகைய சம்மேளனங்கள் அனுபவப் பகிர்வு, பரஸ்பரக் கற்றல், வலையமைப்பு, தொடர்புகள் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.**

**கடந்த கால விவசாயிகள் விடுதலை மாநாடு காட்சிகள்:**

2018 ஆம் ஆண்டு அகமதாபாத் நகரிலுள்ள குஜராத் வித்யாபீத் வளாகத்தில் நடைபெற்ற மாநாடு நிகழ்ச்சி அட்டவணையும் புகைப்படங்களும் கீழ்க்கண்ட இணைப்புகளில் கிடைக்கின்றன:

(https://tinyurl.com/KSS2018Schedule) (https://photos.app.goo.gl/wP1WHJjU364msarK8)

2022 ஆம் ஆண்டு மைசூருவில் உள்ள கர்நாடக மாநில திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநாடு நிகழ்ச்சி அட்டவணையும் புகைப்படங்களும் கீழ்க்கண்ட இணைப்புகளில் கிடைக்கின்றன:://tinyurl.com/KSS2022Schedule

https://photos.app.goo.gl/oKr3SfwgyuFFiwKH9

**பங்கேற்பாளராக பதிவு**

**பங்கேற்பு- முன்பதிவு (Prior Registration) மூலமாக மட்டுமே அனுமதிக்கப்படும்; அதற்காக பதிவு கட்டணம் செலுத்துதல் அவசியம். நிபுணர்கள் (Resource Persons) மற்றும் அனைத்து அமைப்பாளர்களும் உட்பட, அனைத்து பங்கேற்பாளர்களும் கட்டாயமாக பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.** காரணம், நாங்கள் தன்னிறைவு கொண்ட ஒரு இயக்கத்தை உருவாக்க

விரும்புகிறோம். பதிவு “**முதலில் வருபவருக்கு முதல் உரிமை**” என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.ASHA அமைப்பு அரசு நிதி, திட்ட நிதி, வெளிநாட்டு நிதி அல்லது பெருநிறுவன ஆதரவுகளை (corporate sponsorship) சார்ந்து இயங்குவதில்லை என்பதையும் குறிப்பிட வேண்டியது அவசியம். ASHA விவசாயிகள் மாநாடு நிகழ்வுகளின் பாரம்பரியப்படி, இந்த நிகழ்வும் அதிகபட்ச அளவில் தன்னார்வ ஆதாரத்துடன் (self-supported) நடைபெற வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகும்.**இதனை மேற்கொள்ளும் போது, கோரப்படும் பதிவு கட்டணம் காரணமாக பங்கேற்பு சாத்தியமற்றதாக மாறக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கிறோம்.** பதிவு கட்டணம் கீழ்க்கண்டவற்றை மட்டும் உள்ளடக்கும்: ஒரு மாநாட்டு தொகுப்பு (Convention Kit), மிகவும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பகிர்ந்துகொள்ளும் தங்குமிடம், மாநாடு நடைபெறும் நாட்களில் 3 வேளையும் இயற்கை (ஆர்கானிக்) உணவு, அனைத்து முழுக் கூட்டங்களில் (Plenaries) பங்கேற்கும் உரிமை, இணை அமர்வுகளில் (Parallel Sessions) பங்கேற்பு, விதை பன்மைய திருவிழா, கண்காட்சி மற்றும் பயிற்சி/பட்டறைகளுக்கான (Workshops) பார்வை மற்றும் பங்கேற்பு. இந்த பதிவு கட்டணம், மாநாடு நடைபெறும் இடத்திற்கும் வந்து போகும் பயணச் செலவுகளை உள்ளடக்காது. **மைசூருவில் தாங்களே தங்குமிடத்தை முன்பதிவு செய்ய விரும்புபவர்கள் அவ்வாறு செய்யலாம். இருப்பினும், செலுத்த வேண்டிய பதிவு கட்டணம் அதே அளவாகவே இருக்கும்; மேலும், அத்தகைய பங்கேற்பாளர்களுக்காக ASHA அமைப்பால் தினசரி போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்ய இயலாது.**

**பதிவு கட்டணம்:**

| | வகை | பங்கேற்பாளராக பதிவுகட்டணம் (₹) |
|---|---|---|
| 1 | ஊதியதாரர்கள் மற்றும் தொழில்முறை நகரத் துறையினர், ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்கள், அரசாங்க ஊழியர்கள் | 3500 |
| 2 | விவசாயத்தைத் தவிர பிற வருமானம் கொண்ட விவசாயிகள், ஊடக பிரதிநிதிகள், குடிமக்கள் சமூக அமைப்பு (CSO) பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் பிரதிநிதிகள் | 2500 |
| 3 | விவசாயத்தைத் தவிர வேறு வாழ்வாதார ஆதாரம் இல்லாத விவசாயிகள் மற்றும் மாணவர்கள் | 1500 |
| 4 | பெண் விவசாயிகள் | 800 |
| 5 | உண்மையான ஆர்கானிக்/இயற்கை விவசாயிகள், கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் | அவர்கள் உற்பத்தி செய்த 8 கிலோ ஏதேனும் ஒரு தானியம் அல்லது 5 கிலோ பருப்பு |

அனைத்து பதிவுகளுக்கும் மற்றும் கட்டணங்களுக்கும், சுட்டிகள் இங்கே: https://sammelan.kisanswaraj.in/south-india

பதிவு செய்தவர்கள் முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்கினாலே, ஏற்பாட்டாளர்கள் எந்த சிக்கலும் இல்லாமல் தங்கும் இடம் மற்றும் பிற ஏற்பாடுகளை வழங்க முடியும் என்று தயவுசெய்து கவனிக்கவும்.

**பதிவுக்கான கடைசி தேதி: 15 பிப்ரவரி 2026**

**தயவுசெய்து கவனிக்கவும், கடைசித் தேதிக்கு முன், ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்ட அளவிற்கான பதிவுகள் செய்யப்பட்டால், மேற்படி பதிவினை நிறுத்தி வைக்கும் உரிமையை கொண்டிருக்கின்றனர், மேலும் பதிவேற்பு கட்டணம் குறிப்பிடப்பட்டபடி செலுத்தப்பட்டு, முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவு படிவம் சமர்ப்பிக்கப்படும் வரையிலே பதிவு முடிந்ததாக கருதப்படாது.**

**தங்கும் வசதி :** 26 பிப்ரவரி 2026 அன்று மாலை 6 மணிமுதலில் தொடங்கி 1 மார்ச் 2026 பிற்பகல் 1 மணி வரை (சம்மேளனம் 27 பிப்ரவரி 2026 காலை 9:30 மணிமுதல் 3 நாட்கள் நடைபெறுகிறது) மைசூரில் 3 நாட்கள் தங்கும் மற்றும் உணவு ஏற்பாடுகளை மட்டுமே அமைப்பார்கள். அனைத்து பங்கேற்பாளர்களும் 1 மார்ச் 2026 அன்று பிற்பகல் 1 மணிக்கு இடத்தை விட்டு வெளியேற வேண்டும், தனிப்பட்ட கோரிக்கைகள் அல்லது மாற்று ஏற்பாடுகள் இல்லையெனில். இந்த நேரக்கோப்பிற்கு முன்பும் பின்னருமாக விவசாயிகளின் ரயில் அட்டவணை வரம்புகளை கருத்தில் கொண்டு தங்கும் வசதியை நீட்டிக்க கோரலாம். அந்நிலையில், விவசாயிகள் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டியிருக்கலாம் மற்றும்/அல்லது கூடுதல் செலவினத்தை செலுத்த தயாராக இருக்க வேண்டும். அமைப்பாளர்கள் விவசாயிகள் மீது கூடுதல் நிதி சுமையை தவிர்க்க முயற்சிப்பார்கள், ஆனால் அது

உறுதிபடவில்லை. ஏற்கனவே 20 பிப்ரவரி 2026க்கு முன்பு, பங்கேற்பாளர்களுக்கான **உறுதிப்பத்திரம்** மற்றும் பிற ஏற்பாடுகள் தொடர்பான விவரங்களுடன் ஏற்பாட்டாளர்கள் கடிதம் அனுப்புவார்கள், இது பங்கேற்புக்கான அடிப்படையாக இருக்கும். இருப்பினும், **பதிவுசெய்யும் பங்கேற்பாளர்கள் உறுதிப்பத்திரத்தை காத்திருக்காமல் தங்களது டிக்கெட்டுகளை முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கோரப்படுகிறது.**

**எந்தவொரு வடிவிலான புகையிலை பயன்பாடும், புகைபிடித்தல் உட்பட, KSOU மற்றும் KSS2026க்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து வளாகங்களிலும் கடுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.**

## மாநாட்டில் இடம்பெறும் காட்சி அரங்குகள்:

சம்மேளனத்தின் போது காட்சி அரங்குகள் **இயற்கை விவசாயிகள், விவசாயிகள் குழுக்கள், பதிவு செய்யப்பட்ட லாப நோக்கில்லா அமைப்புகள், தனியார் தொழில்முனைவோர் மற்றும் அரசு துறைகள்** ஆகியோருக்காக ஏற்பாடுசெய்யப்படும். **மேலும், இதில் விவசாயக் கருவிகள், சிறு பதப்படுத்தும் இயந்திரங்கள், புத்தகங்கள் மற்றும் நிலைத்த வேளாண்மை குறித்த விழிப்புணர்வுப் பொருட்கள் இடம்பெறலாம்..**

**அங்கீகரிக்கப்பட்ட இயற்கை விவசாயிகள், சிறிய உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மற்றும் அரசு வேளாண் பல்கலைக்கழகங்களால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் இடுபொருள்களைத் தவிர, மற்ற விவசாய இடுபொருட்களைக் (Agri inputs) காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ அனுமதி இல்லை.**

**பல்வேறு வகை அரங்குகளுக்கான பதிவு கட்டணங்கள்:**

| | **வகை** | **காட்சி பதிவு கட்டணம் (₹)** |
|---|---|---|
| 1 | தனியார் தொழில்முனைவோர் மற்றும் அரசாங்கத் துறைகள் | 15000 |
| 2 | 12A சான்றிதழ் பெற்ற அரசாங்கமில்லா அமைப்பு (ngo) | 10000 |
| 3 | **விவசாயிகள் குழு,** விவசாய உற்பத்தியாளர் அமைப்பு, விவசாய கூட்டுறவு, சுய உதவி மற்றும் குறு நிதி குழுக்கள் | 6000 |
| 4 | **விவசாயிகள் சந்தை:**:<br>கிராமங்களில் வாழும், விவசாயத்தை மட்டுமே வருமானமாக கொண்ட தனிநபர் இயற்கை விவசாயிகள் தங்கள் சொந்த உற்பத்திகளை விற்க | 2000 |

**கவனம்:குறிப்பு:**
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களுக்குத் தேவையான அரங்கிற்கு, தேவையான அனைத்து விவரங்களுடன் கீழே உள்ள ஆன்லைன் விண்ணப்பப் படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
https://sammelan.kisanswaraj.in/stall-application/new
ஒவ்வொரு விண்ணப்பமும் ஆஷாவின் தொழில்நுட்பக் குழுவால் ஆய்வு செய்யப்படும். அவர்கள் தயாரிப்புகளின் தன்மை, விலை மற்றும் அதன் தரம் ஆகியவற்றைச் சரிபார்ப்பார்கள். தேவைப்பட்டால், கூடுதல் தகவல்களோ அல்லது தயாரிப்பு மாதிரிகளோ கேட்கப்படலாம்.

சரிபார்ப்பு செயல்முறை முடிந்ததும், விண்ணப்பத்தின் நிலை குறித்து விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும். அனுமதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்குக் கட்டணம் செலுத்துவதற்கான இணைப்பு/சுட்டி (Payment Link) அனுப்பப்படும். பின் கட்டணத்தைச் செலுத்தி, உறுதிப்படுத்தும் செய்தியைப் பெற்ற பின்னரே அரங்கிற்கான பதிவு உறுதி செய்யப்படும். ஏற்பாட்டாளர்கள் எந்த நேரத்திலும், சம்மேளனம் நடக்கும் போது உட்பட, எந்தவொரு காரணமும் தெரிவிக்காமல் ஸ்டால்/மேசை இடத்தை வழங்காமலிருக்கும் உரிமையை வைத்திருக்கின்றனர்.

1. மேற்கூறிய **வகை 1 மற்றும் 2 அரங்குகளுக்கு** இரண்டு பேர் மாநாடு பங்கேற்பாளராக இருக்க முடியும். **வகை 3 மற்றும் 4:** அரங்கிற்கு ஒரு நபர் பங்கேற்பாளராக இருக்க முடியும்

- விவசாயிகள் சந்தை: ஒரு மேசை/இடம் வழங்கப்படும்.
  மற்றவர்கள்: அரங்கு அளவு 50–70 சதுர அடியில், இரண்டு நாற்காலிகள், இரண்டு மேசைகள், ஒரு விளக்கு மற்றும் ஒரு 5 ஆம்ப் \மின் இணைப்பு வழங்கப்படும்.
  எந்தவொரு பதிவிற்கும் பணம் திரும்ப வழங்கப்படாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

**எந்தவொரு பதிவிற்கும் பணம் திரும்ப வழங்கப்படாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். தம்பதியினருக்கு சேர்ந்தே தங்கும் அறை கிடைக்காது. வெவ்வேறு அறைகளில்/கூடங்களில் ஒதுக்கப்படலாம். அதற்காக அவர்கள் தயாராக வர வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.**

**மாநாட்டில் மற்றும் அனைத்து காட்சி அரங்குகளிலும் நெகிழி பைகள், பிளெக்ஸ் பேனர்கள் மற்றும் தெர்மோகால் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது. வளாகத்தில் எங்கும் குப்பை போட கூடாது.**

மேல் **விவரங்களுக்கு , kisanswarajsammelan2026@gmail.com மின்னஞ்சலுக்கு எழுதலாம், அல்லது மாலை 2 மணி முதல் 8:30 மணி வரை 9962043710 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.**